1990 சனவரி 19]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தத் துணைக் கேள்வியின் மூலம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்ததற்காக அரசு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்கும்.

திரு. அ. மாரிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, சம்பந்தப் பட்ட செயற் பொறியாளர் அவர்களை அணுகிக் கேட்கின்ற பொழுது அதற்கு விவசாயத் துறை மூலமாக நடவடிக்கை எடுப் பதா அல்லது வனத் துறையின் மூலம் நடவடிக்கை எடுப்பதா அல்லது பொதுப் பணித்துறை மூலமாக நடவடிக்நை எடுப்பதா என்ற ஒரு ஐயப்பாடு எங்களிடையே இருக்கிறது என்று— சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுகிறார்கள். அதுபற்றிய முழுமை யான விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதைத் தான்—உறுப்பினர் சொன்ன அத்தனையையும் அரசு பரிசீலிக்கும் என்று—சொன்னேன்.

* 2112. திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் காட்டேரியில் வரும் மழை தண்ணீரைத் தேக்கி சிறு அணை கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்பமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் இருக்கின்ற காட்டேரியில் அணை கட்டுவதற்குத் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முந்தைய அரசின் முதல்வராக இருந்த பொழுது நேரில் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அந்தக் காட்டேரியின் சுற்றுப்புறம் மூன்று புறமும் மலையால் சூழப்பட்டிருக்கிறது. ஒரு புறம் மட்டும் தடுப்புச் சுவர் எழுப்பி காட்டேரியில் அணை கட்டினால் அந்தச் சுற்றுச் சூழ்நிலையில் இருக்கின்ற விவசாயி களுக்குப் பாசனத்திற்கு நீர் வசதியும், சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற கிராமங்களுக்குக் குடிநீர் வசதியும் ஏற்படுத்த முடி யும். ஆகவே, இந்த அரசு உடனடியாக அந்த இடத்தில் அணையைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எருமைப்பாளையம் கிராமத்தில் காட்டேரி என்ற ஏரி ஒன்று இப்போது நல்ல முறையில் இருக்கிறது. அதிலே தேக்கப்படும் தண்ணீர் அதற்குரிய பாசன நிலங்களுக்குப் பயன் பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனை அணையாக மாற்ற வேண்டுமென்று சொல்கிறார். அரசினுடைய நிதி நிலைக்கேற்ப அவருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரத்தில் Point of order கிடையாது.

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு அரசின் உதவித் தொகை.

* 2318—திரு. மா. சுந்தரதாஸ்:
மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பனை ஏறும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடையும்போது, பிரேதப் பரிசோதனையின்றி அரசின் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பனை மற்றும் தென்னை மரத்திலேறி தொழில் செய்யும்போது தவறி விழுந்து அடிபட்டு மரணமடையும் தொழிலாளரின் குடும்ப வாரிசுதாரருக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது. அங்ஙனம் நிதியுதவி கோரும் விண்ணப்பங்களை அனுப்பும்போது, அத்துடன் இறந்தவரின் பிரேதப் பரிசோதனைச் சான்றினையும், ஏனைய சான்றுகளுடன் இணைக்க வேண்டும் என அரசு நிர்ணயித்துள்ளது. விபத்து நிமித்தம் வழங்கப்படும் மேற்படி நிதி வழங்கலில், தவறு நேரா வண்ணம் இருப்பதற்காகவே, அரசு இதனை நிர்ணயித்துள்ளதால், இந்த விதியைத் தளர்த்துவதற்கில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒரு பகுதி கேரளாவிலும், ஒரு பகுதி தமிழ் நாட்டிலும் இருக்கிறது. கேரளா பகுதியைப் பொறுத்த வரையில் அங்கே தாசில்தார் உடனடியாக வந்து பார்த்து, வில்லேஜ் ஆபீசர் சர்டிபை செய்து, ஊரிலே இருக்கிற இரண்டு பெரியவர்களிடம் சான்றிதழ் வாங்கி, பிரேதப் பரிசோதனை செய்யாமல் பணம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்